Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 20, 2023

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 20, 2023 | ஒளி: 09 கதிர்: 110 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## விஜயகலா விடுதலை



பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் கொழும்பு நீதவான் நீதிமன்றம் வியாழக்கிழமை (19) விடுதலை செய்தது. கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் வழக்கு அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2


# கடன் மீட்சிக்கு முழு ஆதரவு

## ஜனாதிபதி ரணிலிடம் சீன நிதி அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையின் கடன் மீட்சிக்காக இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சீனா முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக சீன நிதி அமைச்சர் லியு குன் (Liu Kun) தெரிவித்தார். சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சீன நிதி அமைச்சருக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை பீஜிங்கில் வியாழக்கிழமை (19) காலை இடம்பெற்றது. இதன் போதே சீன நிதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## செங்கோலை தொட்டதால்

### 4 வாரங்களுக்குத் தடை



ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெருமவுக்கு 4 வாரங்களுக்கு சபை அமர்வுகளில் பங்கேற்க சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### அரச பத்திரிகைகள் இரண்டின்

## ஆசிரியர்களை விசாரிக்கவும்



போதைப்பொருள்காரரர் ஒருவரை பாதுகாப்பதற்காகவே அரசியலமைப்பு பேரவை செயற்பட்டுள்ளது என்றும், இதனாலேயே பொலிஸ் மா அதிபரின் பதவி நீடிப்பை அனுமதிக்கவில்லை என்றும் செய்தி வெளியிட்ட அரச பத்திரிகைகளில் ஆசிரியர்களை பாராளுமன்றத்திற்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்று பிவித்துறு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மீரியபெத்தவில் இருந்து 16 குடும்பங்கள் வெளியேற்றம்

கொஸ்லந்த - மீரியபெத்த பழைய மண்சரிவுப் பகுதியின் இருபுறமும் உள்ள அதிக ஆபத்துள்ள வலயத்திலிருந்து 16 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அவர்கள், அங்குள்ள பயன்படுத்தப்படாத தேயிலைத் தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மாற்று இடங்கள் வழங்கப்படாத நிலையிலேயே இவர்கள் வெளியேற்றப்பட்டள்ளனர். ஆபத்தான வலயத்தில் இருந்தவர்கள், அங்கிருந்து வெளியேறுவதற்கு மறுத்ததை அடுத்து, மேற்படி விவகாரத்தை பொலிஸார், பண்டாவளை நீதமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

## கேட்க ஆட்கள் இல்லையென்ற நினைப்போ

### டக்ளஸிடம் சார்ள்ஸ் கேள்வி



மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கடலட்டை பிடிப்பதில் தற்போது அமுல் படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டை கடற்தொழில் அமைச்சினால் காலி மாவத்தில் அமுல்படுத்த முடியுமா? என கேள்வி எழுப்பிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன், தனக்கு வாக்கு வங்கியில்லாத மன்னார் மாவட்டத்துக்கு கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றும் குற்றம்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## இன்று இறுதிப் பயணம்: 2024 ஜனவரியே ஆரம்பம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை - தமிழகம் நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் வதந்தி காரணமாக 2 மணி நேரம் தாமதமாகவே புதன்கிழமை (18) புறப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு கப்பல் புறப்பட தயாரான போது, கப்பலில் 2 கிலோ கிராம் தங்கம் கடத்தப்படுவதாக கடற்படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த கடற்படையினர் மற்றும் சுங்க பிரிவினர், பயணிகளை கப்பலில் இருந்து இறக்கி கடுமையான சோதனைகளை முன்னெடுத்தனர். அத்துடன் கப்பலிலும் சோதனைகளை மேற்கொண்டனர்.

தொடர்ச்சி P2






## கால அவகாசத்தை முடக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா?

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தின் சவாலுக்குட்படுத்தும் கால அவகாசத்தை முடக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஜே .வி.பி.தலைவரும் எம்.பி.யுமான அநுரகுமார திஸாநாயக்க, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை உயர்நீதிமன்றத்துக்கு உத்தியோக பூர்வமாக நீதியமைச்சர் அறிவிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

### இந்திய வம்சாவளி தமிழ் மக்களை, 'இலங்கை தமிழர்' என அடையாளப்படுத்த முயலும் விவகாரம்

## "ஏற்றுக்கொள்ள முடியாது"

இந்திய வம்சாமளி தமிழ் மக்களை இலங்கைத் தமிழர் என அடையாளப்படுத்த பதிவாளர் திணைக்களத்தால் முற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

அண்மையில் பதிவாளர் நாயகத்தின் சுற்றுநிருபத்தின் மூலமாக அரசாங்க காரியாலயங்கள், பிறப்புச்சான்றிதழ் மற்றும் ஆள் அடையாளபடுத்த கூடிய அனைத்து ஆவணங்களிலும் இனத்தை குறிப்பிடும் பொழுது எங்களுடைய இந்திய வம்சாவழி தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் இந்திய தமிழர் சோனகர் என்பதற்க்கு பதிலாக அந்த பதத்தினை நீக்கி இலங்கை தமிழர் சோனகர் என குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## அடையாளத்தை அழிக்கும் செயலாகும்

இந்திய வம்சாவளி தமிழ் மக்களை, 'இலங்கை தமிழர்' என அடையாளப்படுத்த முற்படுவது அம்மக்களின் அடையாளத்தை அழிக்கும் செயலாகும். எனவே, பதிவாளர் நாயகம் திணைக்களம் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தை ஏற்றுக்கொள்ள முடியாது" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பிறப்பு சான்றிதழ் உட்பட பதிவாளர் நாயகம் திணைக்களத்துக்குரிய ஆவணங்களில் "இனத்தைக் குறிப்பிடும் போது, இந்திய தமிழ் / சோனகர் என்பதை இலங்கைத் தமிழ்/ சோனகர் என பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள்" எனும் தலைப்பின்கீழ் பதிவாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் தொடர்பில் அமைச்சர் தனது கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தாக ஜனாதிபதி மற்றும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரான, பிரதமர் ஆகியோருடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

" பதிவாளர் நாயகத்தின் யோசனையுடன் நாம் உடன்படவில்லை. எமது மக்களுக்கு 200 வருடகால அடையாளம் உள்ளதுடன் 200ஆவது வருடத்தில் எமது அடையாளத்தை அழிப்பதற்கு முற்படுகின்றனர்.

தொடர்ச்சி P2



## செந்தில் கடும் எதிர்ப்பு



பிறப்பு, இறப்பு சான்றிதழில் இனத்தினை குறிப்பிடுவது குறித்து பதிவாளர் நாயக திணைக்களம் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தை வன்மையாக கண்டிப்பதாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். பிறப்பு, இறப்பு சான்றிதழ்களில் தமது இனத்தை குறிப்பிடுவது தொடர்பாக பதிவாளர் நாயக திணைக்களத்திற்கு சுற்றுநிருபம் வெளியிட எவ்வித உரிமையும் இல்லை.

தொடர்ச்சி P2

## அதிகாரத்தை வழங்கியது யார்?

ஆ.ரமேஸ்.



இலங்கையில் வாழ்கின்ற சுமார் 15 இலட்சம் இந்திய வம்சாவளி மக்களை தனியொரு தேசிய இனமாக ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்க கருத்து வேறுபாடின்றி அனைவரும் ஏற்றுக்கொள்ள கூடிய நடவடிக்கை அவசியமாகுமென நுவரெலியா

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கடன் மீட்சிக்கு முழு ஆதரவு



இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவாலை சீனா நன்கு புரிந்துகொண்டுள்ளதாகத் தெரிவித்த சீன நிதியமைச்சர், நெருக்கடியைச் சமாளிக்க இதுவரை இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றார்.

இலங்கையின் அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குச் சீனா தொடர்ந்து பூரண ஆதரவை வழங்கும் எனவும் சீன நிதி அமைச்சர் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பணப் பரிமாற்றம் தொடர்பில் நீண்டகாலமாகக் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாகவும், சீனாவுடன் நெருக்கமாகச் செயற்படும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுவதாகவும் சீன நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சவாலான பணியில் இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை மிகவும் பாராட்டுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். நாட்டின் பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் போட்டித்தன்மை வாய்ந்த டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குமான வேலைத்திட்டம் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.


இந்த சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சண்ட்ரா பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

- ஜனாதிபதி ஊடகப் பிரிவு

# விஜயகலா விடுதலை



2018ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தை மீள ஸ்தாபிக்க வேண்டும் என தெரிவித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு இதற்கு முன்னர் பிணை வழங்கப்பட்டிருந்தது. சந்தேகநபருக்கு எதிரான வழக்கை தொடர்வதற்கு போதிய சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் அறிவுறுத்தியதாக பொலிஸார் முன்னதாக நீதிமன்றுக்கு அறிவித்திருந்தனர்.



# செங்கோலை தொட்டதால்

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) ஏற்பட்ட அமைதியின்மையின்போது செங்கோலைத் தொட்டதால் சபாநாயகர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, அதற்கான நேரத்தை நீடிப்பது குறித்து சர்ச்சை ஏற்பட்டிருந்தது. இதன்போது அஜித் மான்னப்பெரும, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் எழுப்பியிருந்த கேள்விக்கு அமைச்சர் வாய்மூலம் பதிலளிக்காது அதனைச் சபையில் சமர்ப்பித்தார்.

இவ்வேளையில், வாய்மூலம் விடையளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்த அஜித் மான்னப்பெரும, சபைக்கு நடுவே சென்று போராட்டத்தில் ஈடுபட்டதுடன், செங்கோலைத் தொட முயன்றபோது, சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்குச் சபாநாயகர் ஒத்தி வைத்தார்.

சபை நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சபை ஒழுங்கு விதிகளை மீறியே அஜித் மான்னப்பெரும செயற்பட்டதாகவும், இதன்போது செங்கோலைத் தொட்டமைக்காக அவருக்கு நான்கு வாரங்கள் சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளத் தடை விதிப்பதாகவும் அறிவித்தார்.

# மீரியபெத்தவில் இருந்து 16 குடும்பங்கள் வெளியேற்றம்

அதன்பிரகாரம், அக்குடும்பங்களை வெளியேற்றி அதன் முன்னேற்றத்தை வியாழக்கிழமை (19) நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறு பண்டாரவளை பதில் நீதவான் கென்னத் டி சில்வா, புதன்கிழமை (18) உத்தரவிட்டிருந்தார்.

கொஸ்லந்த பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் டி.தினேஷ் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் பொலிஸ் கான்ஸ்டபிள் புவனேஸ்வரன் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுச் சென்றிருந்தார்.

இது தொடர்பில் ஒலிபெருக்கி மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும் எனவும், அவ்வாறு செல்லாவிட்டால் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் எனவும் கொஸ்லந்த பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தினேஷ் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார்.

# கேட்க ஆட்கள் இல்லையென்ற நினைப்போ

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வாக்கு வங்கி மாவட்டங்களாகக் கிளிநொச்சியும் யாழ்ப்பாணமும் உள்ளதால் இவ்வாறான கட்டுப்பாட்டுக்களை அமுல்படுத்தினால் வாக்கு வங்கியில் பாதிப்பு ஏற்படும் என்பதால் வாக்கு வங்கியில்லாத மன்னார் மாவட்டத்துக்குக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) இடம்பெற்ற வரிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களுக்கு பாராளுமன்ற அனுமதி கோரும் விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு வலியுறுத்திய அவர், மேலும் பேசுகையில், மன்னார் மாவட்டத்தில் அட்டை பிடிப்பதற்கான அனுமதிப் பத்திரத்துடன் கடற்றொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர் ஒருவர் அதிகபட்சமாக 150 அட்டைகளை மாத்திரமே பிடிக்க முடியும் எனவும் scuba diving க்கான அனுமதிப் பத்திரம் வைத்திருக்கும் கடற்றொழிலாளர் 250 அட்டைகளை மாத்திரமே பிடிக்க முடியும் என்ற புதிய சட்டம் ஒன்றை மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்திற்குக் கடிதம் மூலம் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு உங்களினால் இப்படி ஒரு சட்டத்தைப் போட முடியுமா? தமிழர் பகுதிகளில் மட்டும்தான் நீங்கள் நினைப்பதுபோல் சட்டங்களை அமுல்படுத்துகின்றீர்கள். தமிழர் பகுதிகளில் உங்களைக் கேட்க ஆட்கள் இல்லை என்ற நினைப்பில்தான் இவ்வாறு செய்கின்றீர்கள் என கேள்வி எழுப்பினார்.

# ஆசிரியர்களை விசாரிக்கவும்

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) சிறப்புரிமையை பிரச்சினையை எழுப்பியே மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

அரச பத்திரிகைகள் இரண்டில் போதைப் பொருள்காரர் ஒருவரை பாதுகாப்பதற்காகவே அரசியலமைப்பு பேரவை செயற்பட்டுள்ளது என்றும், இதனாலேயே பொலிஸ்மா அதிபரின் பதவி நீடிப்பை அனுமதிக்கவில்லை என்றும் நேரடியாக தலைப்பு செய்திகள் ஊடாக குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன. 'இந்த பேரவையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டோர் உள்ளனர். இது தொடர்பில் முழு சபையின் சிறப்புரிமைகளும் மீறப்பட்டுள்ளன. இது பொய்யா? உண்மையா? என்று கூற வேண்டும் என்பதுடன், அந்த பத்திரிக்கைகளின் ஆசிரியர்களை பாராளு மன்றத்திற்கு அழைத்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோருகின்றேன் என்றார்.

# கால அவகாசத்தை முடக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா?

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (19) விசேட கூற்றை விடுத்தே மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

பாராளுமன்றத்தின் 2023.10.03ஆம் திகதி ஒழுங்குப்பத்திரத்தில், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஆகிய சட்டமூலங்கள் சபைக்கு சமர்ப்பிப்பதற்காக உள்ளடக்கப்பட்டிருந்தன. பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால், முதல் வாசிப்புக்காக அது சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

"சட்டமூலம் ஒன்று பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் நாட்டு பிரஜைகள் அதை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும்" என அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் ஐந்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் சபைக்கு சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவில்லை.

சட்டமூலம் ஒன்று பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியுமா, அல்லது சட்டமூலம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியுமா? என்ற பிரச்சினை எழுந்துள்ளது. பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் படி நீதிமன்றம் செயற்படாது. அரசியலமைப்புக்கு அமைவாகவே நீதிமன்றம் செயற்படும் என்றார்.

எனவே, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தின் சவாலுக்குட்படுத்தும் கால அவகாசத்தை முடக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகம்ஏற்பட்டுள்ளது.

ஆகவே, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை நீதியமைச்சர் உயர்நீதிமன்றத்துக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# இன்று இறுதிப் பயணம்: 2024 ஜனவரியே ஆரம்பம்

சந்தேகத்திற்கு இடமான முறையில் எந்த பொருட்களோ, தங்கமோ கிடைக்காத நிலையில், கப்பலில் மீண்டும் பயணிகளை ஏற்றி பயணத்தை தொடர அனுமதித்தனர்.

இந்த சோதனை நடவடிக்கையினால் சுமார் 2 மணி நேர தாமதத்தின் பின்னரே கப்பல் புறப்பட்டுச் சென்றுள்ளது.

அதேவேளை, வெள்ளிக்கிழமை (20) முதல் கப்பல் சேவை நிறுத்தப்பட்டு, 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலே மீண்டும் சேவையை ஆரம்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# "ஏற்றுக்கொள்ள முடியாது"

மலையக மக்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே வன்மையான எனது கண்டனத்தை தெரிவித்துகொள்கிறேன். இது என்னுடைய இனத்தையும் சமூகத்தையும் என்னுடைய முஸ்லிம் சமூக மக்களுடைய கௌரவம் அனைத்தையும் ஒரு கேள்விக்குறியாக்குகின்ற சுற்றுநிருபமாகவேநான் இதனை காண்கின்றேன் .

200 வருடம் 5 பரம்பரையாக வாழ்ந்துந்து கொண்டிருக்கின்ற இந்திய வம்சாவழி மக்கள் இந்திய அரசாங்கத்தின் பயனாக பல நன்மைகளை பெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த நாடு இவ்வாறான ஒரு மோசமான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளதை நான் வன்மையாக கண்டிக்கின்றேன் என்றார்.

# அடையாளத்தை அழிக்கும் செயலாகும்

இதனை ஏற்க முடியாது. இது சம்பந்தமாக ஜனாதிபதி, பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வை பெற முற்படுவோம்.

எமது மக்கள் போரிடவும் இல்லை, தனி நாடு கோரவும் இல்லை. தனி அடையாளத்தைதான் கோருகின்றனர். அதனையும் அழிக்க முற்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. இலங்கை தமிழர் என பதிவு செய்தால் அது பெரும் அநீதியாக அமைந்துவிடும். 30 வருடங்கள் பிரஜா உரிமை இல்லாமல் வாழ்ந்தோம். எமது தொழிலாளர்கள் அடிமைகள்போல் வழிநடத்தபபடுகின்றனர். தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான நகர்வுகளும் இல்லை எமக்கு எமது அடையாளம் வேண்டும்.

எனவே, மேற்படி யோசனையை ஆதரிக்க முடியாது. அதனை எதிர்ப்போம்" என்றார்

# செந்தில் கடும் எதிர்ப்பு

இலங்கையர் என்ற வகையில் தனது இனத்தைப் பிறப்பு இறப்பு சான்றிதழ்களில் குறிப்பிட இந்நாட்டுப் பிரஜை என்ற வகையில் அனைவருக்கும் உரிமை உள்ளது. பிரஜா உரிமை இல்லாத சமூகமாக நாம் இருந்த பொழுது, இந்தியா வம்சாவளி தமிழர்கள் என்ற அடையாளமே எமக்கான அங்கீகாரமாக இருந்தது. எம் இனத்தின் அடையாளத்தைத் தீர்மானிப்பதற்கு மூன்றாம் தரப்பினருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. 1948ஆம் ஆண்டுகளில் பிரஜா உரிமை இன்றி இருந்த நம் சமூகம் கிட்டத்தட்ட 40 வருடப் போராட்டங்களுக்குப் பிறகு இந்திய வம்சாவளியினர் என்ற அங்கீகாரத்துடன் பிரஜா உரிமை பெற்றது. இந்திய வம்சாவளி தமிழ் மக்களை, 'இலங்கை தமிழர்' என அடையாளப்படுத்த முற்படுவது அம்மக்களின் அடையாளத்தை மறைக்கும் ஒரு செயல்பாடாகும். இவ்வாறான சுற்றுநிருபங்களை வெளியிடுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அதிகாரத்தை வழங்கியது யார்?

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்க உபதலைவருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

இந்திய வம்சாவளி மக்களாக நாட்டில் வாழும் சுமார் 15 இலட்சம் மக்களில் எட்டரை இலட்சம் மக்கள் இந்தியத் தமிழர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, ஐந்து இலட்சம் மக்கள் இலங்கைத் தமிழர்களாகவும், பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இருப்பினும் எஞ்சியுள்ள ஒன்றரை இலட்சம் மக்களின் பதிவு எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற கேள்வியும் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சுமார் 15 இலட்சம் மக்களையும் அவர்களின் பதிவு வகைகளையும் கணக்கிட்டு அவர்களை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தேசிய இனமாக அங்கீகாரம் வழங்க அனைவரும் ஒன்றிணைந்து நல்ல தீர்வினை எடுக்க வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இலங்கையில் இந்திய வம்சாவளி மலையக மக்கள் இன்று 200 வருட வாழ்வியல் வரலாற்றைக் கொண்டுள்ளனர். இருந்தபோதிலும், எம் மக்களுக்கு ஒரு சரியான நிலையான தேசிய இனம் என்ற அங்கீகாரம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் நாட்டில் வாழும் மக்கள் தொகையில் சுமார் 15 இலட்சம் மக்களுக்குத் தேசிய இனம் என்ற அங்கீகாரத்தை அரசாங்கம் வழங்க வேண்டும் என்ற விடயத்தை முன்னிறுத்தி நான் உட்பட பலரும் கோரிக்கை முன் வைத்துள்ளனர். அதேநேரத்தில் இந்திய வம்சாவளி மக்களை "இலங்கைத் தமிழர்" என அடையாளம் படுத்த பதிவாளர் நாயக திணைக்களம் சுற்று நிருபம் வெளியிட்டுள்ளது. அவ்வாறாயின் இவ்வாறு"இலங்கைத் தமிழர்" என இன அடையாளத்தைப் பதிவிடப் பதிவாளர் நாயக திணைக்களத்திற்கு அதிகாரத்தை வழங்கியது யார்?என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார்.

# “இரட்டை வேடம் போடுகிறார்”

புகஜிந்தன்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் விவகாரங்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரட்டை வேடம் போடுகிறார். மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை விவகாரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பில் உடனடியாக மேய்ச்சல் நில அபகரிப்பில் மேலதிக செயற்பாடுகளை நிறுத்துமாறு உத்தரவிட்டார். ஆனால், மறுநாள் அரச படைகளினதும் பொலிஸாரின் பாதுகாப்புடனும் மேற்கொள்ளப்படும் புத்தர் சிலை விவகாரம் மற்றும் அத்துமீறிய மேய்ச்சல் நில அபகரிப்பு போன்றவற்றை தடுத்து நிறுத்தாது கண்டும் காணாதவர் போல ஜனாதிபதி செயற்படுகிறார் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.



மேலும், தனது அதிகார கதிரையை பாதுகாக்க தனக்கு சாதகமான பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலம் முடிந்து நீடிக்கப்பட்டு மேலதிக காலமும் முடிவடைந்த நிலையில், தங்களுக்கு பொருத்த மானவரை நியமிக்கும் வரையும் இருப்ப வரை தக்க வைக்க வெளி நாட்டில் இருந்து வந்த உடன் நடவடிக்கை எடுக்கும் ஜனாதிபதி, தமிழர் தாயகத்தில் சட்டவிரோதமாக நடைபெறும் செயற்பாடுகளை ஏன் தனது அரச இயந்திரத்திற்கு கீழ் உள்ள கட்டமைப்புக்களை நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்து நிறுத்தவில்லை.

ஆகவே, இத்தகைய நடவடிக்கைகள் ஜனாதிபதி இரட்டை வேடம் போடுகிறார் என்பதை கோடிட்டுக் காட்டுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

# ஓட்டோக்களை திருடி: உல்லாசமாக இருந்தவர் கைது



ஓட்டோக்களை திருடி, அதனை துண்டு துண்டுகளாக கழற்றி, குறைந்த விலையில் விற்று, கிடைக்கும் பணத்தில் பெண்களுடன் உல்லாசமாக இருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் முச்சக்கரவண்டிகளையே இவர் திருடியுள்ளார்.

அவ்வாறு திருடிய ஓட்டோக்களை குறைந்த விலைக்கு முகப்புத்தம் ஊடாக விற்றுள்ளார்.

அதில் கிடைக்கும் பணத்தில் பெண்களுடன் பழகி, பணத்தை செலவழித்துள்ளார் என தெமட்டகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் 8 மாதங்களில் 21 ஓட்டோக்களை திருடியுள்ளதாகவும் அவற்றின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபாய் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

6 ஓட்டோக்களையும், ஓட்டோக்களின் மீதமுள்ள பாகங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கிரிபத்கொடையில், குறைந்த விலைக்கு ஓட்டோவை விற்பனை செய்ய முயன்ற நபர் ஒருவர் தொடர்பில் தெமட்டகொடை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் கபில பண்டாரவிற்கு தகவல் கிடைத்துள்ளது.

அவர் வழங்கிய தகவலுக்கமைய, சந்தேகநபரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியபோதே இந்த திருட்டுச் சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மயங்கி விழுந்த மாணவி மரணம்



அத்துருகிரிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனாகொட பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் திடீர்ரென உயிரிழந்துள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹோமாகம, முல்லேகம பகுதியைச் சேர்ந்த தினிதி திமாரா என்ற 14 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் புதன்கிழமை (18) பாடசாலை சென்று வீட்டுக்கு வந்த பின்னர் தனது தோழி ஒருவருடன் படித்துக்கொண்டிருக்கும்போது திடீரென வாந்தி எடுத்து தரையில் விழுந்துள்ளார்.

அதன் பின்னர் குறிப்பிட்ட மாணவியை ஒருவல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



## மண்மேடு சரிந்ததால் போக்குவரத்து தடை

எல்ல - வெல்லவாய பிரதான வீதியின் மண்மேடு சரிந்து விழுந்ததில் குறித்த வீதியுடனான போக்குவரத்து முற்றாக தடைபட்டுள்ளதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# வாழைப்பழம் சிக்கியதில் வயோதிபர் மரணம்

வாழைப்பழத்தின் சிறிய துண்டு சிக்கியதால் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பன்னிபிட்டிய ஹிரிபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் கடற்படையின் ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அதிகாரியான ஹெட்டி கங்கணமாலையின் லக்ஷ்மன் ஹெட்டி பத்திரன (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



இந்த நபர் பல வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்ததால் அவரது மனைவி அவரை கவனித்து வருகிறார். இந்நிலையில், கடந்த 18ஆம் திகதி சாப்பாட்டுக்குப் பின்னர் வாழைப்பழம் கொடுத்துள்ளார்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது திடீரென வாழைப்பழத் துண்டொன்று தொண்டையில் சிக்கியதையடுத்து, அவருக்கு மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவரை ஹோமாகம ஆதார வைத்தியசா லையில் அனுமதித்த நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# பாலஸ்தீன தூதுவரிடம் கவலையை தெரிவித்தனர்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், இலங்கையில் உள்ள பாலஸ்தீன தூதரகத்தில், தூதுவர் கலாநிதி. ஸுஹைர் எம்.எச்.டார் செயிட்டை வியாழக்கிழமை (19) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.


இதன்போது ரிஷாட், எல்லை மீறிய இஸ்ரேலின் எதேச்சதிகாரப் போக்குகளால், காசாவில் ஏற்பட்டுள்ள அவலங்கள் குறித்து, தனது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துள்ளார்.

மேலும், போர் விதிகளை மீறி இஸ்ரேல் கட்டவிழ்த்துள்ள வான் தாக்குதல்களைக் கண்டிப்பதுடன், முஸ்லிம் உலகம் ஒன்றுபட்டு ஸியோனிஸவாதிகளை எதிர்க்க ஆயத்தமாக வேண்டும் என்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் குற்றுயிராகக் கதறும் சகோதரர்களுக்காகப் பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌசி மற்றும் ஹலீம் ஆகியோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மர்ம சத்தம் குறித்து ஆய்வு

செ.தி.பெருமாள்



நுவரெலியா பிரதேசத்தில் பழங்காலத்தில் இருந்தே அன்றாட பாவனைக்கு பயன்படுத்தப் பட்ட நீர் ஆதாரங்கள் திடீரென காணாமல் போனமை மற்றும் பூமிக்கு அடியில் இருந்து கேட்கும் மர்மமான சத்தம் தொடர்பில் அவசர ஆய்வு மற்றும் முறையான விசாரணை நடத்தப்படும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலகொட தெரிவித்துள்ளார்.

கொத்மலை ஹதுனுவெவ, வெத்தலாவ பிரதேசத்தின் மழைக்காலத்தில் நிலத்தடியில் எழுந்துள்ள அசாதாரண சத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே மாவட்ட செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# பக்கவாட்டில் பஸ் புரண்டதில் பயணி பலி: 15 பேர் காயம்

நாரம்மல - அலவ்வ வீதியில் தம்பெலஸ்ஸ பாலத்திற்கு அருகில் தனியார் பஸ் ஒன்று வியாழக்கிழமை (19) கவிழ்ந்ததில் பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 15 பேர் காயமடைந்துள்ளதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாரம்மல-கிவுலேகெதர பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்வர்ணலதா முனதுங்க என்ற 51 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்கள் நாரம்மல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# நிரந்தர நியமனம் கோரி போராட்டம்

பாறுக் ஷிஹான்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று புதன்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை - கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்திலிருந்து ஆளுநர் செயலகம் வரை குறித்த போராட்டம் பேரணியாக இடம்பெற்றுள்ளது.

இப்போராட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் சிற்றூழியர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## கம்பஹா பிரதேச சபை விலைமனுக் கோரல்

மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றிற்கு முழு காப்புறுதியை மேற்கொள்ளுதல்

**கொள்முதல் இலக்கம் - D5/04/2023**

01. கம்பஹா பிரதேச சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் முச்சக்கரவண்டிகள் ஆகியவற்றிற்கு முழுமையான காப்புறுதி மேற்கொள்வதற்காக 2023.11.27 ஆம் திகதி முதல் 2024.11.26 ஆம் திகதி வரையிலான ஒரு வருட காலத்திற்கு பின்வரும் காப்பீடுகள் உள்ளடங்களாக முழுமையான காப்புறுதி மேற்கொள்வதற்காக சீல் வைக்கப்பட்ட விலைமனுக்கள் என் மூலம் கோரப்படுகின்றன.

**பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய காப்புறுதிகள்**

I. கலவரம் மற்றும் உள்நாட்டு கலவரம் காப்பீடு
II. திடீர் விபத்து காப்பீடு
III. தீ காப்பீடு
IV. இயற்கை பேரழிவுகள் காப்பீடு
V. திருட்டு காப்பீடு
VI. மூன்றாம் தரப்பு காப்புறுதி குறைந்தபட்சம் 02 இலட்சம் ரூபாவாக இருக்க வேண்டும்.
VII. வாகனத்தில் பயணிக்கும் ஒருவருக்கு தனிநபர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை குறைந்தபட்சம் 50,000.00 ரூபாயாக இருக்க வேண்டும்.
VIII. தொழிலாளர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை (சாரதிகளுக்கு)
IX. பயங்கரவாதத் தாக்குதல் காப்பீடு

**02. தேசிய போட்டி ஏல முறைப்படி ஏலம் அழைக்கப்படும்.**

03. இதில் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் 21.10.2023.10.21 ஆம் திகதி முதல் அரசாங்க அலுவலக வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரையான காலப்பகுதியில் கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திலுள்ள அபிவிருத்திப் பிரிவிற்குச் சென்று ஏலங்களை சரிபார்க்கலாம் மேலும் இது தொடர்பான கூடுதல் விவரங்களை பணி அதிகாரியிடம் (033-2220145) அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

04. 2023.10.21 ஆம் திகதி முதல் 2023.11.10 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீள் வழங்கப்படாத ரூ. 1000.00 (ஆயிரம் ரூபாய்) கட்டணத்தை பணமாக செலுத்தி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அபிவிருத்திப் பிரிவிலிருந்து ஏல ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஏலப் பாதுகாப்பு தொகையாக ரூ. 5,000.00 (ஐந்தாயிரம் ரூபா) வை கம்பஹா பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்டு மேற்படி ரசீதுகள் சீல் செய்யப்பட்ட விலைப்பத்திரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. ஏலங்கள் அசல் மற்றும் நகல் ஆக தயார்செய்து 2023.11.13 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு “பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட” என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும். அசல் மற்றும் நகல் கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “கொள்முதல் இலக்கம், கொள்முதலின் பெயர் மற்றும் அசல் அல்லது நகல் ஆகியவை காகிதத்தின் மேல் இடது மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.” என குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலை மனுக்கள் கிராகரிக்கப்படும். விலை மனுக் கோரல்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் கம்பஹா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் வருகைத்தந்திருக்கும் ஏலதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

**எஸ்.ஏ.என்.பீ. சுரவீர**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள்,**
**கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரி**
**கம்பஹா பிரதேச சபை,**
**மிரிஸ்வத்த, முதுன்கொட.**
**2023.10.20**

**தொ. இல: 033 2220145**
**தொநகல்: 033 2220144**

# அறிகுறிகள் இருக்குமாயின் எச்சரிக்கையை அச்சொட்டாக பின்பற்றவும்

ஒருசில மாதங்களுக்குத் தொடர்ச்சியாக வெப்பமான காலநிலை நீடித்திருக்குமாயின், மழை பெய்தாலென்ன? எனக் கேட்டவர்கள் பலர், இருந்தாலும் இப்படி அடித்து வாங்கக்கூடாது. பெய்தது போதும்தானே என மழை மீது கோபம் கொள்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர். எவ்வாறான வானிலை மாற்றங்கள் ஏற்பட்டாலும், அதற்குப் பின்னர் ஏதாவது வைரஸ் தொற்றுகள் பரவதான் செய்கின்றன.

மழை ஓய்ந்த பின்னர் டெங்கு காய்ச்சல் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளே அதிகமாக இருக்கும். அதற்கு முன்னர் முன்னாயத்தங்களைச் செய்துகொள்வர். டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளில், நுளம்பு குடம்பிகள் தேங்கும் இடங்கள் அழிக்கப்படும்.

பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் புகை விசுரப்படும். எனினும், தற்போதைய காலகட்டத்தில் நிலைமையே மாறிவிட்டது.

மழை இன்னும் ஓயவில்லை. ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பிரதேசங்களில் மழை வெளுத்து வாங்குகின்றது. வானிலை அவதான நிலையத்தின் எதிர்வு கூரல்களையும் மழை பொய்ப்பித்து விடுகின்றது.

இதனால், சாதாரண மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே ஒரு வகையான வைரஸ் பரவத் தொடங்கிவிட்டது. அத்துடன், கண்நோயும், மிகவேகமாகப் பரவத்தொடங்கி விட்டன.

இதனால், பாடசாலை மாணவர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்நோய் பரவியமையால் கொழும்பில் உள்ள பாடசாலையொன்றும் பல நாட்கள் விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளது.

தனக்கு கண்நோய் ஏற்பட்டுள்ளது என தெரிந்துகொண்டால், மற்றவர்களுக்குப் பரப்பி விட்டுவிடாது கவனமாக இருக்கவேண்டும். பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

பெரும்பாலான மக்கள் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் கண் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். சில சிறியதாக இருக்கலாம், அவை தானாகவே போய்விடும் அல்லது வீட்டிலேயே எளிதில் சிகிச்சையளிக்கப்படலாம், மற்றவை பெரியவையாக இருந்தால், கவனிப்புக்கு கண் மருத்துவ நிபுணர் தேவை. ஆகையால், கண்களில் வருத்தம் ஏற்பட்டால், கண் மருத்துவ நிபுணரை நாடுவதே சிறந்தது.

இந்நிலையில்தான், கண்நோயுடன் மேலதிகமாக காய்ச்சலுடன் கூடிய வயிற்றுப்போக்கும் பாடசாலை மாணவர்களிடையே பரவி வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்களில் வலி, கண்ணீர், கண்கள் சிவத்தல் மற்றும் கண் அரிப்பு ஆகியவை இதன் அறிகுறிகளாகும் என்றும் தெரிவித்துள்ளது.

தமது பிள்ளைகளுக்கு ஏதேனும் கண்நோய் இருந்தால் பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் ஹிரண்ய அபேசேகர, பெற்றோர்களிடம் கேட்டுக்கொண்டார்.

நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளை முன்பள்ளி மற்றும் பாடசாலைகளுக்கு அனுப்பாமல் இருப்பதன் மூலம் இந்நிலைமையை கட்டுப்படுத்த முடியும் என அவர் பெற்றோரை வலியுறுத்தியுள்ளார்.

ஆகையால் அறிகுறிகள் இருக்குமாயின் அறிவுறுத்தல்களை அச்சொட்டாகப் பின்பற்றுவது அவசியம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சிலர் தெரியாதவர்களுடன் கூட மோதுகின்றார்கள். பொது இடங்களில், பஸ்கள், விழாக்கள், சந்தைகளில் கண்டபடி வாக்குவாதம் செய்கின்றார்கள். மிக மோசமாக சண்டையிடுகின்றார்கள்.

பகைமை எப்படித் திடீரென முற்றுகின்றது? பலர் வெட்கமே இல்லாமல், ஆணவத்துடன் செயற்படுதல் மனிதமற்ற செயலாகும்.

பொது இடங்களில், கூட்ட நெரிசலில் முந்திக்கொள்ள முனைவார்கள். இதன்போது வாக்குவாதம் ஏற்படும். பின்னர் சண்டைதான். இன்னும் சிலர், தெருவால் போகின்றவர்களை வேண்டுமென்றே கேலி செய்வார்கள். கேட்பவர்கள் விடுவார்களா? மோதல் வெடிக்கும். திருமண வீடுகளில் சிலர் அநாகரிகமாக நடந்துகொள்வார்கள். ஏதாவது சின்ன விடயங்களைப் பெரிதாக்கி, வார்த்தைப் பிரயோகங்களை நெருப்பாக வீசுவார்கள். சந்தோசம் சிலருக்குப் பிடிப்பதே இல்லை. விழாக்களில் அரசியல் பேசி, சிலர் தங்கள் கட்சியே பெரிதென விவாதிப்பார்கள். அதுவே, கலிங்கத்துப் போர் போலாகிவிடும். வெட்கமே இல்லையா?

எந்த விழாவுக்கும் பொலிஸாரை வரவழைக்க வேண்டியுள்ளது. ஆணவத்தை அடக்கி பொறுமையாக இருங்கள்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கவனித்து உதவுங்கள்



கிளிநொச்சி மாவட்டத்தில் வறுமையும் வாழ்விட வசதியும் இன்றி அதிகளவான குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அந்த வகையில் இறுதி யுத்தம் நடைபெற்றபோது நாட்டுக்காக இரண்டு பிள்ளைகளை கொடுத்துவிட்டு இன்று தவித்துக் கொண்டிருக்கும் தாயும், திருமணமாகிய அவரது மகளான கர்ப்பிணியும், வீட்டு வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட தகரக் கொட்டகை ஒன்றில் வாழ்ந்து வருகின்றார்.

மேலும், அவர்கள் அன்றாட உணவு மற்றும் வாழ்வாதார வழியின்றியும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான வீட்டுத் திட்டங்களை வழங்கவும் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்களினுடைய தற்காலிக வீடுகளை வழங்கவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆகையால், இந்த விவகாரத்தை கையாளும் தரப்பினர், தங்களுக்கு வாழக்கூடிய வகையில் வீடொன்றை நிர்மாணித்துத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

– யது பாஸ்கரன்

### கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 22

# சிங்களம் மட்டுமே: சிறுபான்மையினருக்கு சவக்குழி



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1940களின் இறுதியில் சிறுபான்மையினரை இலக்கு வைத்த அரசியல் நகர்வுகள் மெது மெதுவாக நாட்டின் பொதுப்புத்தி மட்டத்தில் செல்வாக்குச் சேர்க்கும் வகையில் அரங்கேறத் தொடங்கின. இலங்கையின் பொருளாதாரச் சரிவும் மக்கள் மீதான அக்கறையற்ற பொருளாதாரக் கொள்கைகளும் தேசிய அரசியலின் வங்குரோத்து நிலையைக் காட்டி நின்றன. குறிப்பாக 1950களின் நடுப்பகுதியில் மக்களிடம் வாக்குக்கேட்பதற்கான நியாயமான வாதங்கள் எதுவுமற்ற நிலையில், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி நெருக்கடிக்கு உள்ளானது.

அவர்களது ஆட்சியில் பொருளாதாரம் நலிந்திருந்தது, மக்கள் நலன்கள் கிடைக்கவில்லை, நடைமுறைப்படுத்தப்பட்ட தாராண்மைவாத பொருளாதாரக் கொள்கைகள் கிராமப்புறச் சிங்களவர்களிடம் மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால் உணர்ச்சிகர அரசியலைக் கையிலெடுப்பது தவிர்க்கவியலாததானது. இது சிங்களத் தேசியவாதத்திற்கு ஒரு பெருந்தேசிய அகங்காரத்தைக் கொடுப்பதை முக்கியமாக்கியது. நாட்டின் ஏனைய சிறுபான்மையினர்களின் நலன்களைப் பலியிடுவதன் மூலமே அரசியல் அரங்கில் செல்வாக்குடன் இருக்கவியலும் என்ற நிலை உருவானது. இது இன்றுவரைத் தொடர்கிறது. 1953ஆம் ஆண்டு வேலைநிறுத்தம் அனைத்து இன மக்களும் இணைந்து உரிமைகளுக்கான போராட்டத்தை முன்னெடுக்கவியலும் என்பதை உணர்த்தியது. ஆனால் இவ்வேலைநிறுத்தத்திற்கு தலைமையேற்ற இடதுசாரித் தலைமைகளின் தவறுகள் இப்போராட்டங்களை ஒரு மக்கள் இயக்கமாக உருவாக்கத் தவறின. இப்பின்னணியில் தனிச்சிங்களம் என்ற இனவாதக் கோஷம் மத்தியத்தர சிங்களச் சமூகங்களிடம் செல்வாக்குப் பெறுவது சாத்தியமானது. வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து, மக்களை ஒன்றிணைத்த முற்போக்கான அரசியலை இடதுசாரிகள் முன்னெடுத்திருப்பின் மொழிப்பிரச்சினை முக்கிய பிரச்சினையாவதை நிறுத்தியிருக்க முடியும். ஆனால் அது நடக்கவில்லை. இதனால் சிங்களம் மட்டுமே என்ற வாதங்கள் மொழிப்பிரச்சினை என்ற வடிவில் தொடங்கி தேசிய இனப்பிரச்சினை என்ற வடிவை எடுத்து, போராக முகிழ்த்து மிகப்பெரிய மனித அவலத்தைக் கொண்டு சேர்த்தது. தனிச்சிங்களத்தை ஆக்ரோசமாக முன்னெடுத்த பண்டாரநாயக்க ஆங்கிலத்தையே தனது அன்றாட வாழ்விலும் பொது வாழ்விலும் பயன்படுத்தியவர், அவரது சிங்களப் புலமை மிகக் குறைவானது. சிங்களத்தில் அரச கருமங்களையோ தனது தொழிலையோ முன்னெடுக்க இயலாதவராக அவர் இருந்தார். பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக வேண்டும் என்பதில் தீவிரமுடையவரானதற்கான பிரதான காரணம் அரசியல் சந்தர்ப்பவாதமே. இந்த சந்தர்ப்பவாதத்திற்கு மூன்று காரணிகள் அடிப்படையாகின.

முதலாவது, தேசிய அரசியலில் மக்களைக் கவர்வதற்கான வேலைத்திட்டங்களோ, பொருளாதார நோக்கோ இல்லாத நிலையில், இனவாதமே மக்களை இணைக்கும் கருவி என்பதை பண்டாரநாயக்க உணர்ந்து கொண்டார். அதன் எளிமையான, சாதாரண மக்களுக்கு விளங்குவதற்கு தனிச்சிங்களமே பொருத்தமானது என்பதை அவர் தெரிந்திருந்தார்.

இரண்டாவது, அவர் சார்ந்த தேசிய முதலாளி வர்க்க நலன்களுக்கு தனிச்சிங்களம் என்ற வாக்குறுதி பெருமளவில் நேரடியாக உதவாவிட்டாலும், ஐக்கிய தேசியக் கட்சியில் அண்டியிருந்த தரகு தன்னை வேறுபடுத்திக் காட்ட அது பயன்பட்டது. எனவே, வேறுபட்ட அரசியல் நிறத்தை வழங்க இது உதவியது. மூன்றாவது, 1953 வேலைநிறுத்தத்தின் பின்னர், சிங்கள நடுத்தர வர்க்கம் புத்துணர்ச்சி பெற்றது. இந்த வேலைநிறுத்தம் நடுத்தர வர்க்கத்தின் அரசியல் விழிப்புணர்வுக்கு வழிகோலியது. ஆனால், அதைத் தொடர்ந்து தொய்வடைந்த இடதுசாரிச் செயற்பாடுகள் ஒருவித சோர்வை ஏற்படுத்தியிருந்தன. இந்நிலையில், பண்டாநாயக்கவின் தனிச்சிங்களம் ஒரு ஊக்க மருந்தாகியது. இதனால் பெரும்பான்மை நடுத்தர சிங்கள வாக்காளர்களிடம் நிலவிய அரசியல் வெற்றிடத்தைத் தனது இனவாதம் மூலம் நிரப்பி தனக்கான வாக்குகளாக பண்டாநாயக்க மாற்றிக்கொள்ள சிங்களம் மட்டுமே என்பதைப் பயன்படுத்தினார்.

இங்குக் கவனிக்க உகந்தது யாதெனில், சிங்களம் மட்டுமே என்ற கருத்தின் மூலவர் பண்டாரநாயக்க அல்ல. இதுகுறித்து முன்னைய கட்டுரைகளில் பார்த்துள்ளோம். சிங்களம் மட்டுமே நேரடியான கொலனி ஆட்சியினின்று சுதந்திரம் கிடைக்க முன்பே சட்டசபையில் முன்வைக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு சமரசம் காணப்பட்ட விடயமாகும். எனினும், இலவசக் கல்வியும் தாய்மொழிக் கல்வியும் கல்வியறிவைப் பரவலாக்கிய சூழ்நிலையில் கல்வியறிவு பெற்ற ஒரு சிங்கள நடுத்தர வர்க்கம், அரசாங்க உத்தியோகங்களில் தமிழரின் விகிதாசாரம் தமிழரின் சனத்தொகைக்குரியதை விட சில மடங்காவது அதிகமாக இருந்ததைப் பற்றி அறிந்திருந்தது. அரச உத்தியோகங்களை தமதாக்கிக் கொள்ளும் ஒரு வாய்ப்பைத் தவறவிடச் சிங்கள நடுத்தர வர்க்கம் தயாராக இல்லை. ஆங்கில மூலம் கல்வி கற்ற அரச மருத்துவ சேவையாளர்களிடையே தமிழர் கணிசமான எண்ணிக்கையில் இருந்தனர். சிங்கள நாட்டு வைத்தியத்திற்கு (ஆயுர்வேதம்) இல்லாத அரச அங்கீகாரம் மேலைநாட்டு மருத்துவத்துக்கு இருந்தது. பொருளாதாரத்திலும் சமூக அங்கீகாரத்திலும் பின் தள்ளப்பட்டு வந்த சிங்கள நாட்டு வைத்தியர்களுக்கு ஆங்கில வைத்தியத்தின் மீதிருந்த பகைமை ஆங்கிலத்தின் மீதும் இருந்தது. தமிழ் மருத்துவர்களும் மருத்துவ சேவையாளர்களும் கணிசமான அளவில் தமது சூழலில் காணப்பட்டபோது, அப் பகைமை, தமிழர் மீதான ஒரு பகைமை கலந்த போட்டியாகவும் வடிவெடுத்தது. இதுவும் சிங்களத்திற்கு ஏகோபித்த ஆதரவை வழங்கியது.

இதனாலேயே சிங்கள பௌத்தச் சிந்தனையில் ஊறிப்போன புத்த பிக்குகளில் பெரும்பாலானோரையும் ஆயுர்வேத வைத்தியர்களையும் சிங்கள மொழிப்புலமையுடைய ஆசிரியர்களையும் தன் பின்னால் திரட்டச் சிங்களம் மட்டுமே கொள்கை உதவும் என்பதனாலேயே பண்டாரநாயக்க இவர்களையும் விவசாயிகளையும் தொழிலாளிகளையும் இணைத்து ‘பஞ்சமா பலவேகய’ (ஐம்பெரும் சக்திகள்) என்ற தனது கூட்டணியை உருவாக்கினார். 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாக்கப் படவேண்டும் என்ற கருத்து முக்கியத்துவம் பெற்றது.

சிங்களம் மட்டுமே என்பதை முன்மொழிந்து செயற்பட்டோர் பலர். அதில் சிலர் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மை. சிங்களம் மட்டுமே என்ற யோசனையை முதன்முதலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரேரித்த பெருமைக்கு உரிமை கொண்டாடினோரில் பதியுத்தின் மஹ்மூதும் ஒருவர். ட்ரொட்ஸ்கியத்தின் பிதாவான பிலிப் குணவர்தன சிங்களமே அரச கரும மொழியாகவும் தமிழ் வட, கீழ் மாகாணங்களில் பிரதேச மொழியாகவும் அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டை 1955இல் எடுத்தார். 1955ஆம் ஆண்டு கொத்தலாவல தலைமையிலான அரசாங்கம் தாய்மொழிச் கல்வியைப் பாடசாலைகளில் கட்டாயப் படுத்துமாறும் எதிர்காலத்தில் அரசாங்க சேவைக்கான பரீட்சைகள் சிங்களத்திலும் தமிழிலும் நடத்தப்படும் என்றும் தனது கொள்கையை அறிவித்தபோது அதை எதிர்த்தவர்களில் முக்கியமானவர். வவுனியா பாராளுமன்ற உறுப்பினரான சி.சுந்தரலிங்கம். அரச அலுவலகத்திற்கும் உயர் கல்விக்கும் தாய் மொழியைப் பயன்படுத்துவது நாட்டைப் பிளவுபடுத்தும் என்று சொல்லுமளவுக்கு அவரது ஆங்கில விசுவாசம் இருந்தது. அதன் பின்பு, அரசாங்கம் தாய்மொழிக் கல்வியை நடைமுறைப்படுத்துவதை எதிர்த்துத் தான் பாராளுமன்றத்தை மூன்று மாதங்களுக்குப் பகிஷ்கரித்துப் பதவி இழக்கப் போவதாக அறிவித்து அவ்வாறே செய்தார். அதற்குத் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தினதும் தமிழரசுக் கட்சித் தலைவர் வன்னியசிங்கத்தினதும் ஆதரவைப் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிங்களம் மட்டுமே என்பதை யார் வெற்றிகரமான அரசியல் கோஷமாக முன்னெடுப்பது என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மிகுந்த போட்டி நிலவியது. இக்காலப்பகுதியில் நடைபெற்ற நிகழ்வுகள் கவனிக்கத்தக்கன. 1955 செப்டெம்பரில் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற கொத்தலாவல, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரகடனம் செய்யப்பட்ட கொள்கைப்படி சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துடைய அரச கரும மொழிகளாக்கப்படும் என்று உறுதி வழங்கினார். கொத்தலாவலவின் இந்த உறுதிமொழி தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பைக் கிளப்பியது.

சம அந்தஸ்து வழங்கினால் சிங்கள இன அடையாளமே அழிந்து விடும் என்று பிரசாரம் கட்டவிழ்க்கப்பட்டு ஊடகங்கள் இதை ஊதிப் பெருப்பித்தன. சிறுபான்மையினருக்கு எதிரான பொதுப்புத்தி உருவாக்கத்தில் சிங்கள ஊடகங்கள் முக்கிய பங்காற்றின. 1953 வரை தெளிவானதொரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1955ஆம் ஆண்டு சிங்களமே அரச கரும மொழி என்றும் நியாயமான தமிழ் பயன்பாடும் என்ற கொள்கையை அறிவித்தது. இந்தப் பின்புலத்தில் பாராளுமன்றில் 1955 ஒக்டோபரில் சமசமாஜக்கட்சித் தலைவர் என்.எம். பெரேரா, சிங்களமும் தமிழும் அரச மொழிகளாகுமாறு அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என யிரேரணையை முன்வைத்தார். இதற்கு சிங்களத்தையே அரச மொழியாக்கும்படி அரசியல் யாப்பு உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு திருத்தப் பிரேரணையை பண்டாரநாயக்க முன்மொழிந்தார். 1956 பெப்ரவரியில் ஐக்கிய தேசியக் கட்சியின் களனி மாநாட்டில் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாகும் என்ற பிரேரணையைக் கொத்தலாவல முன்வைத்தார். அது ஏற்கப்பட்டதை அடுத்து கட்சியில் இணைந்திருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அக்கட்சியிலிருந்து விலகினர். சு. நடேசபிள்ளை தனது அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.




### இலங்கையில் உணவுப் பாதுகாப்புக்கு

# நிலைபேறான விவசாயத்தில் அவசர மாற்றம் அவசியம்

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் (WFP), இணைந்து இலங்கையில் நிலைபேறான மற்றும் காலநிலைக்கு ஏற்ற விவசாயத்தை நோக்கிய அவசர நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுத்துள்ளன.
உலக உணவு தினத்தை முன்னிட்டு இந்த அழைப்பைவிடுத்துள்ளன.

FAO மற்றும் UN Water ஆகியன ஒன்றிணைந்து அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையின் நன்னீர் வளங்கள் மற்றும் அவற்றின் நிலைத்திருக்கும் தன்மையின் மீதான மனித நடவடிக்கைகளின் கணிசமான அழுத்தத்தை பிரதிபலிக்கும் வகையில், 90.8 வீத குறிகாட்டியுடன் இலங்கை 'உயர் நீர் அழுத்தத்திற்கு உள்ளானதாக' வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் பெறப்படும் மொத்த நன்னீர் வருடாந்தம் 12.95 பில்லியன் கனமீற்றர் என மதிப்பிடப்பட்டுள்ளது, இந்நன்னீரில் 82 வீதம் நெல் நீர்ப்பாசனத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படுகிறது மற்றும் 5 வீதத்திற்கும் அதிகமான அளவு மற்ற பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய பயன்படுத்தப்படுகிறது. உலகளாவிய காலநிலை இடர் சுட்டெண்ணில், குறிப்பாக நீர் வளங்கள் மீதான தாக்கத்துடன் தொடர்புடைய காலநிலை அபாயங்களின் அடிப்படையில் இலங்கை தொடர்ந்து உயர்நிலையில் உள்ளது.

இதை கருத்தில் கொண்டு, ஐ.நா. உணவு முகவர்கள் (FAO, IFAD, மற்றும் WFP) இலங்கை விவசாய உணவு முறைகளை மாற்ற வேண்டியதன் அவசியத்தை கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர பங்குபற்றிய உலக உணவு தினத்தை நினைவுகூரும் நிகழ்வில் வலியுறுத்தினார். இந்நிகழ்வு, முகவர்களால் ஆதரிக்கப்படும் நவீன அணுகுமுறைகள், நிலைபேறான மற்றும் காலநிலை-எதிர்ப்பு விவசாயத்தை நோக்கி தேசிய அளவிலான வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளை எடுத்துக்காட்டுகிறது.

இளம் காலநிலை ஆர்வலர் தாரிகா பெர்னாண்டோவின் விவாதங்கள், கலை மற்றும் சிறப்பு உரை போன்ற நிகழ்வுகள் மூலம் இளைய தலைமுறையினரின் குரல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

நிகழ்வில் பேசிய ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச், 'அதிகரித்துவரும் நீர் அழுத்தம் மற்றும் காலநிலை பாதிப்புகளை எதிர்கொள்ளும் போது, நிலைபேறான மற்றும் காலநிலை-எதிர்ப்பு நடைமுறைகளை மேற்கொள்வது இன்றியமையாத ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் சபையானது இலங்கையுடன் இணைந்து அதன் நீர் மற்றும் உணவு அமைப்புக்களை பலப்படுத்துவதற்கு தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதுடன், எதிர்காலத்திலும் அனைவருக்கும் போதுமான மற்றும் போசாக்கான உணவு கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது' எனக்குறிப்பிட்டார்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான FAO பிரதிநிதி விம்லேந்திர ஷரன், இலங்கையின் விவசாய உணவு முறைகளை மாற்றியமைக்க உதவுவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்தினார்.

'எதிர்வரும் தலைமுறைகளுக்கு இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, இலங்கையின் விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகள் காலநிலையைத் தாங்கக்கூடியவை என்பதை உறுதிப்படுத்த, அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற FAO உறுதிபூண்டுள்ளது.

கழிவுகள், மாசுபாடு மற்றும் காலநிலை பாதிப்புகளை குறைக்க நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மற்றும் மீனவர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்,' என்று குறிப்பிட்டார்.

SLT–MOBITEL mTunes இனால்

## 'Be a Millionaire' ஊக்குவிப்புத் திட்டம்

மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைமுறை அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதற்காக SLT-MOBITEL இனால் mTunes இல் பாவனையாளர்களுக்கு தனது புதிய 'Be a Millionaire' ஊக்குவிப்புத் திட்டத்தினூடாக பணப் பரிசுகளை வெல்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு தமக்கு பிடித்த பாடலை அல்லது ஓடியோ உள்ளம்சத்தை, தமது Caller Ring Back Tone (CRBT) ஐ மாற்றியமைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கும் டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவையாக mTunes அமைந்துள்ளது. அழைப்புகளை மேற்கொள்கையில் பிரத்தியேகத்தன்மையை வழங்குவதாக அமைந்திருப்பதுடன், தமது அன்புக்குரியவர்களுடன் தமது தெரிவை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.




mTunes கட்டமைப்பில் பெருவாரியான பாடல் தெரிவுகள் காணப்படும் நிலையில், 'Be a Millionaire' ஊக்குவிப்புத் திட்டத்தினூடாக பாவனையாளர்களுக்கு தமக்கு விரும்பிய பாடல்களை கேட்டு மகிழ்வதுடன், பெருமளவு பணப் பரிசுகளை வெல்லும் வாய்ப்பை பெற்றுக் கொள்ளவும் முடியும். 2023 செப்டெம்பர் 1ஆம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை, mTunes களில் 'Be a Millionaire' ஊக்குவிப்புத் திட்டத்தினூடாக பங்குபற்றும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சிறந்த பரிசுகள் வழங்கப்படும். மாபெரும் இறுதிப் பரிசாக ஒரு மில்லியன் பரிசுத் தொகை (ரூ. 1,000,000) வழங்கப்படும். இரண்டாம் வெற்றியாளருக்கு ரூ. 100,000 மற்றும் மூன்றாம் வெற்றியாளருக்கு ரூ. 50,000 தொகை வழங்கப்படும். மேலும் ஏழு அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு தலா ரூ. 10,000 வீதம் வழங்கப்படும். மேலும், ஒவ்வொரு வாரமும், மொத்தமாக பன்னிரண்டு வெற்றியாளர்கள் ரூ. 10,000 பணப் பரிசுக்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

இந்த ஊக்குவிப்புத் திட்டத்தில் பங்கேற்பது இலகுவானது. ஏற்கனவே காணப்படும் மற்றும் புதிய CRBT பாவனையாளர்களுக்கு இந்த பெறுமதி வாய்ந்த பரிசுகளை வெல்லும் வாய்ப்பு கிடைக்கும், இவற்றில் மில்லியனர்களாக திகழும் வாய்ப்பும் அடங்கியுள்ளது. ஊக்குவிப்பு காலப்பகுதியில் அதிகளவு mTunes களை செயற்படுத்திக் கொள்வதனூடாக இதற்கான வாய்ப்புகளைப் பெற முடியும். பல்வேறு பணப் பரிசுத் தெரிவுகள் காணப்படுவதுடன், ஒவ்வொரு வாரமும் வெற்றியீட்டுவதற்கான பல்வேறு வாய்ப்புகளும் காணப்படுகின்றன. கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்கான சிறந்த வாய்ப்பாக 'Be a Millionaire' ஊக்குவிப்புத் திட்டம் அமைந்துள்ளது.

தினசரி mTunes களை செயற்படுத்திக் கொள்வதனூடாக தமது வெற்றி வாய்ப்புகளை பாவனையாளர்கள் அதிகரித்துக் கொள்ள முடியும். mTunes இனால் வழங்கப்படும் விநோத, விறுவிறுப்பு மற்றும் களிப்பூட்டும் அனுபவங்களை பாவனையாளர்கள் பெற்று, இசை உலகை ரசிக்க முடியும்.



## என்னய்யா செய்தீர்?

வன்னியில் துடித்தபோது
வாழ்விழந்து தவித்தபோது
சென்னிகள் சிதறுண்டு
செந்நீரில் அமிழ்ந்தபோது
என்னய்யா செய்தீர்நீவிர்
எதிரியோடணைந்து நின்று
இன்னிசை பாடிக்கொண்டு
இனிய பாற்சோறுண்டீரே.

ஒரு மொழி பேசிவந்தும்
ஒரு நில வாழ்வுகொண்டும்
வருதுயர் தமிழர்க்கென்றே
வசமாக விலகிநின்றீர்
செருக்களம் கண்டவீரர்
சீர்மையை இகழ்ந்தல்லால்
உருப்பட என்னசெய்தீர்
உள்ளதில் மகிழ்ந்ததன்றி.

இஸ்ரேலும் பலஸ்தீனமும்
எம்நோக்கில் மனிதர்களே
பசியோடு பரிதவிக்கும்
பாலகர்கள் தெய்வங்களே
இசையோடு வாழ்ந்த மக்கள்
எங்கெங்கோ சிதறி நிற்க
வசைபாடும் பழக்கமென்றும்
வளர்தமிழர்க் கில்லையென்போம்.

எவரெங்கு துன்புறினும்
எம்கண்ணில் நீர்கசியும்
அவர்பசியில் வாடுகையில்
அடிவயிறு பதறியழும்
அவரிவர் என்றவொரு
பேதமிலாவாழ்வு கண்டால்
எவர்துயரும் எம்துயராய்
இருந்திடுமே எந்நாளும்.

கந்தவனம்
கோணேஸ்வரன்



## பிரப்பன் காடு

பிரப்பன் காடு அது
என்னூர்ப் பிராணிகளின் வீடு
வரங்களாக வாய்த்த
வசந்தகாலக் காடு
உரங்களேதும் இடுவதில்லை
உண்மையில் தனிச்சேறு
உதவுவதே ஊருக்குள்
உயிர்களுக்குப் பெரும்பேறு.

இரக்கமோடு இடம்கொடுக்கும்
கட்டிடக் கூடு
இரவினிலே வெளியிடுமே
காபன்வாயுச் சூடு
அரக்கன்போல் குளக்கரையில்
அமைந்த மேடு
ஆமைகளும் உடும்புகளும் அதனுள்
அத்தனை பாடு.

புரண்டுபின்னிக் கிடக்குமெங்கள்
பிரண்டை அதில்
பூத்துக்காய்த்துக் குலுங்குமெங்கள்
பிரப்பை
நேற்றுப் பார்க்கக் காணவில்லை
இந்த இரண்டை
நேர்மையோடு வளரவைத்த
அப்பிரம்பு மருந்தை.

கனமழையும் காற்றுமதைக்
கவிழ்த்துவிடும் குளத்தில்
கரைபுரண்டு வெள்ளமோட
களைப்படையும் அவ்விடத்தில்
அரைகுறையாய் ஆடைகளைக்
களைந்துவிட்டு நிலத்தில்
அள்ளிக்கொண்டு போகவிடும்
அதையோர் புலத்தில்.

பிரப்பன்காய் எனக்குச்
சரியான விருப்பம்
பிஞ்சுக்காய்தான் கொஞ்சம் கூடக்கசக்கும்
பிரம்பாலடித்தாலே ஐயாமார்
உடம்பெல்லாம் தடிக்கும்
பிள்ளைகளைத் தொட்டாலிப்போ
எல்லாமே கண்டிக்கும்.

நீலையூர் சுதா



## முதிர்ச்சி (மூப்பு)

அதிகாரத்தின் ஆக்கிரமிப்பில்
பரவிய மதமும்,
அன்பு கூறி அரவணைத்துப்
பரப்பிய மதமும்,
துறப்போமென்று பற்றுவைத்தலைப்
பெருக்கிய மதமும்,
தொன்மையிலே இருந்ததனைத் தோன்றி
வந்து
விழுங்கிய மதமும் தோன்றாக் காலம்...


காற்றின் போக்கில் நாணல் சாயும்
காலப்போக்கில் வெள்ளம் பாயும்
காரணம் எதனையும்
கற்பிக்குமுன்னமே இயற்கையை
உணர்ந்தனன்
இயைந்து வாழ்ந்தனன்...

மனிதம் மாந்தி
மதங்கள் தோன்றி
மருகிப்போன இயற்கையின் அணைப்பில்
காரியம் செய்து காரணம் யாத்தனர்...

உலகைப் படைத்தவன்
உலகைக் காப்பதாய்
இயற்கையை மறந்தனர்
ஏறிமிதித்தனர்.....
முதிர்ச்சியென்பது எதற்குமுண்டென
முதலில் சொன்னது இயற்கைதான்!
மாற்றமென்பதே மாறாதொன்றென
இடித்துச் சொன்னது இயற்கைதான்!
இறப்பு என்பதை எவர்க்கும் பொதுவென
இருப்பில் உணர்த்திய
இறைவன்! ..இறைவன்!
இயற்கைதான்!



ஈச்சையூர் சிவா




## அடர் இருளில் ஒரு மின்மினி


ஏற்கனவே வரையப்பட்ட ஓவியம்
தான் அழித்து வரைய
முடியவில்லை
விதியின் கைதான் தூரிகை
என்றாகியதால்
நீண்ட பயணச் சுவடு
மகிழ்ச்சி வெற்றி தோல்வி
பிரிவு வலிகள் என எல்லாவற்றிற்கும்
ஓரேயளவு பிரகாசம் தான்
அங்கும் நின்று நிதானிக்கத்
திராணியற்று
உணர்வுகளின் வாழ்தலுக்கு
ஆயுளில்லா அரும் பூச்சி அது

அடிமன விருப்புகளை
ஆட்டிப்பார்க்கத் தூளிகள்
இல்லை
விருப்பு வெறுப்புக்கள் அனைத்தும்
வெற்றுக் காகிதங்களில்
கறுப்புமை பிரசவித்த
உணர்வுக் குழந்தைகளாய்

எதையும் முயன்று பார்க்க
நினைப்பதில்லை
காரணம்
முடிவுகள் அவ்வளவாய்
இனிப்பதில்லை
சிற்றொளிக்கு இருள் கலைக்கும்
கற்பனையும் உண்டோ எனக்
குத்திக் கதைக்கையிலும்
மௌனமாய்ப் பறக்கின்றது
அங்கும் சிறு ஒளியுடன் தான்.

குகதா
கிளிநொச்சி






# புற்றுநோயில் இருந்து காப்பாற்றும் பிரா

நீங்கள் தேநீர் அருந்தும்போது கூட உங்கள் மார்பகங்களில் உள்ள கட்டிகளைக் கண்டறியும் அல்ட்ராசவுண்ட்(Ultrasound) சாதனத்தை உங்கள் பிராவின் மேல் அணிந்திருப்பதை கற்பனை செய்து பாருங்கள்.

துருக்கியைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர். ஜனன் தாடெவிரென் தனது குழுவினருடன் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் (Massachusetts Institute of Technology ) (எம்ஐடி) ஆய்வகத்தில் பிராவின் மேல் அணிந்திருக்கும் அல்ட்ராசவுண்ட் (Ultrasound) சாதனத்தை உருவாக்கியுள்ளார்.



மார்பக புற்றுநோயால் இறந்த தனது அத்தையின் நினைவாக இந்த கருவியை அவர் தயார் செய்துள்ளார்.

மார்பக புற்றுநோயின் அதிக ஆபத்து காரணமாக அடிக்கடி மேமோகிராம் (mammograms) செய்ய அறிவுறுத்தப்பட்ட பெண்களுக்கு இந்த சாதனம் உதவியாக இருக்கும். அத்தகைய பெண்கள் இந்தக் கருவி மூலம் இரண்டு மேமோகிராம்களுக்கு இடையில் கூட மார்பக புற்றுநோயைக் கண்காணிக்க முடியும்.

புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானோர் மார்பக புற்றுநோயால் தான் பாதிக்கப்படுகின்றனர். உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, 2020ஆம் ஆண்டில், 23 இலட்சம் பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 6 இலட்சத்து 85 ஆயிரம் பேர் இந்த நோயால் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல்


# “உதவிகளை தடுக்க மாட்டோம்”

“எகிப்திலிருந்து காசாவுக்கு வரும் மனிதாபிமான பொருட்களை இஸ்ரேல் தடுக்காது” என இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த முடிவை இஸ்ரேல் எடுத்துள்ளது.

இஸ்ரேல் சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு ஆதரவு தருவதாக பேசினார். பின்னர், காசாவுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் வகையில் செயல்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். அதன்படி, “எகிப்திலிருந்து வரும் மனிதாபிமான பொருட்களை இஸ்ரேல் தடுக்காது. அதேநேரம், எங்கள் பிணைக் கைதிகள் திருப்பி அனுப்பப்படாத வரையில், இஸ்ரேல் எல்லையில் இருந்து காசாவிற்கு மனிதாபிமான பொருட்களை இஸ்ரேல் அனுமதிக்காது. ஆனால் எகிப்தில் இருந்து வரும் உதவிகளை தடுக்காது" என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.



# புற்று நோய் மருத்துவமனை மீது தாக்குதல்



காசா பகுதியில் உள்ள ஒரேயொரு புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை மீது இஸ்ரேல் விமானப்படை தாக்குதல் நடத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் ஒரே மருத்துவமனை இதுதான் என தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் 30 பேர் பலியாகியுள்ளதாகவும் 21 பேர் காயமடைந்ததாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துருக்கி-பலஸ்தீன நட்பு மருத்துவமனை என்று பெயரிடப்பட்ட இந்த மருத்துவமனை, துருக்கியின் ஆதரவுடன் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


இஸ்ரேல்

# காசாவுக்கு நிதியுதவி

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் தீவிரமடைந்து வரும் நிலையில், இஸ்ரேலுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் புதன்கிழமை (18) இஸ்ரேலுக்கு சென்றார்.

இதனைத் தொடர்ந்து, டெல் அவிவில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தில் ஜோ பைடனும், பெஞ்சமின் நேதன்யாகுவும் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் இருவரும் கூட்டாக பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தனர்.

ஹமாஸ் அமைப்பினர் ஐ.எஸ். பயங்கரவாதிகளை விட மோசமானவர்கள். தீமைகள் மற்றும் அட்டூழியங்களைச் செய்துள்ளனர்.



இஸ்ரேல் தன்னை தற்காத்துக்கொள்ள தேவையானதை அமெரிக்கா உறுதி செய்யும் என்றார். மேலும், அவர் காசா மற்றும் மேற்கு கரையில் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக 100 மில்லியன் டொலர் நிதியுதவியை அமெரிக்கா வழங்கும் எனவும் அறிவித்தார்.

உத்தரபிரதேசம்

# ‘நூரி'யால் ராகுலுக்கு சிக்கல்

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தனது தாயார் சோனியாவுக்கு அளித்த நாய்க்கு ‘நூரி’ என்று பெயர் வைத்ததை எதிர்த்து அவர் மீது உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த அகில இந்திய மஜ்லிஸ் கட்சித் தலைவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார்.

‘நூரி’ என்ற வார்த்தை இஸ்லாமியப் புனித நூலான குரானுடன் தொடர்புடையது, குரானில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது என்று வழக்குத்தொடுத்துள்ளார்.

ராகுல் காந்தி தனது முகநூல் பக்கம், யூடியூப் பக்கத்தில் நாயின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், செய்தித்தாள்களிலும் இது தொடர்பான செய்திகள் வந்துள்ளன. அவற்றை ஆதாரமாகக் காட்டியுள்ளோம்’ என்றார்.

உலக விலங்குகள் தினத்தையொட்டி கடந்த 4ஆம் திகதி தனது தாயார் சோனியாவுக்கு ‘நூரி’ என்று பெயரிடப்பட்ட நாய்க்குட்டியை ராகுல் காந்தி பரிசளித்திருந்தார்.





புது டெல்லி

# உச்ச நீதிமன்றுக்கு முன் நிச்சயதார்த்தம்



இந்தியாவில் தன்பாலின திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கக்கோரி உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இந்த வழக்குகள் நீதிபதி சந்திரசூட் தலைமையிலான 5 பேர் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரித்துத் தீர்ப்பு வழங்கியது.

அப்போது இவ்வழக்கில் 4 விதமான தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதில் சட்டம் இயற்றும் அதிகாரம் தங்களுக்கு கிடையாது என்பதைச் சுட்டிக் காட்டிய நீதிபதிகள், மத்திய அரசின் முடிவிற்கு இதனை விட்டுவிட்டனர்.

இந்நிலையில், ஏமாற்றம் அடைந்த தன்பாலின ஜோடி ஒன்று உச்ச நீதிமன்றத்திற்கு வெளியே மோதிரம் மாற்றி தங்கள் நிச்சயதார்த்தம் செய்துள்ளது.

# நெய்மருக்கு சத்திர சிகிச்சை



பிரேஸிலின் முன்களவீரரான நெய்மருக்கு, உருகுவேயுடனான செவ்வாய்க்கிழமை (17) உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியின்போது இடது முழங்காலில் தசைநார்க் பாதிப்படைந்நதாக பிரேஸிலின் கால்பந்தாட்ட சம்மேளனம் வியாழக்கிழமை (19) அறிவித்துள்ளது.

இந்நிலையில், 31 வயதான நெய்மர் சத்திர சிகிச்சைக்கு உள்ளாகவுள்ளார். எட்டு மாதங்களில் நெய்மர் மீண்டும் விளையாடுவார் என கால்பந்தாட்ட சம்மேளன மருத்துவப் பணியாளர் நினைப்பதாக தகவல் மூலங்கள் தெரிவித்துள்ளன.

# நாப்போலியிலிருந்து வெளியேறும் ஒஸிம்ஹெறன்?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான நாப்போலியின் முன்களவீரரான விக்டர் ஒஸிம்ஹெறன்னைக் கைச்சாத்திடுவதில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான செல்சி, ஆர்சனலுடன் லிவர்பூலும் இணைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நாப்போலியுடன் அடுத்த பருவகாலம் வரைக்கும் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 24 வயதான ஒஸிம்ஹெறன், 95 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களவில் பெறுமதியுடையவராகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.





# மியூனிச்சிலேயே தொடரும் முசியாலா?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் மத்தியகளவீரரான ஜமால் முசியாலாவுடன், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான லிவர்பூல், மன்செஸ்டர் சிற்றியின் ஆர்வத்துக்கும் மத்தியிலும் புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதில் அக்கழகம் நம்பிக்கையுடன் உள்ளதாகக் கூறப்படுகிறது. எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரையில் மியூனிச்சுடன் 20 வயதான முசியாலா ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணம்

# ஆப்கானிஸ்தானை வீழ்த்திய நியூசிலாந்து

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், சென்னையில் செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற ஆப்கானிஸ்தான் உடனான போட்டியில் நியூசிலாந்து வென்றது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

நியூசிலாந்து: 288/6 (50 ஓவ.)

(துடுப்பாட்டம்: கிளென் பிலிப்ஸ் 71 (80), டொம் லேதம் 68 (74), வில் யங்க் 54 (64), றஷின் றவீந்திர 32 (41), மார்க் சப்மன் ஆ.இ 25 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: நவீன்-உல்-ஹக் 2/48, அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 2/56, ரஷீட் கான் 1/43, முஜீப் உர் ரஹ்மான் 1/57) ,

ஆப்கானிஸ்தான்: 139/10 (34.4 ஓவ.) (துடுப்பாட்டம்: ரஹ்மத் ஷா 36 (62), அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 27 (32) ஓட்டங்கள். பந்துவீச்சு: லொக்கி பெர்கியூசன் 3/19, மிற்செல் சான்ட்னெர் 3/39, ட்ரெண்ட் போல்ட் 2/18, மற் ஹென்றி 1/16, றஷின் றவீந்திர 1/34)

போட்டியின் நாயகன்: கிளென் பிலிப்ஸ்.



# டொட்டமுண்டுக்குச் செல்லவுள்ள சஞ்சோ?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டிலிருந்து அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் ஜடோன் சஞ்சோ வெளியேறுவதற்கான வழியொன்றை வழங்க ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் தயாராகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டின் முகாமையாளர் எரிக் டென் ஹக்குடனான மோதலைத் தொடர்ந்து தமது முன்னாள் வீரரான சஞ்சோவைக் கைச்சாத்திடுவதற்காவ விருப்பத்தை பொதுவெளியில் டொட்டமுண்ட் மறுத்திருந்தபோதும், நிதி அளவீடுகள் சரியாகவிருந்தால் அவரை ஜனவரியில் கைச்சாத்திடுமெனக் கூறப்படுகிறது.

பருவகால முடிவு வரையான கடனில், 23 வயதான சஞ்சோவின் ஊதியத்தை பகுதியளவில் யுனைட்டெட் செலுத்தினால் அவரை டொட்டமுண்ட் கைச்சாத்திடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 20 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.